செ.வெ.எண்: 65 நாள்:24.08.2016

# பத்திரிக்கை செய்தி

மாற்றுத்திறனாளிகள் சமுதாயத்தில் ஒரு முக்கியமான அங்கம் என்பதனையும் சமுதாய வளர்ச்சிக்கு அவர்களின் ஈடுபாடு மிகவும் அவசியம் என்ற நிலையை உறுதிப்படுத்தி அவர்களின் வளர்ச்சிக்கு சிறப்பான அணுகுமுறை அவசியம் என்ற சீரிய நோக்கோடு தமிழக அரசு மாற்றுத்திறனாளிகளின் நலனைப் பேணுவதற்காக தணித்துறை ஒன்றை அமைத்து பல்வேறு வகையான நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தமிழக அரசு மாற்றுத்திறனாளி குழந்தைகளை சிறுவயதிலேயே கண்டறிந்து அவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவி மற்றும் சமூக பொருளாதார அளவிலான வளர்ச்சிகளுக்கு தேவையான வசதிகளை ஒருங்கிணைந்த அளவில் செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதனடிப்படையில் கடந்த 5 ஆண்டுகளில் நமது மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளை திருமணம் செய்து கொள்ளும் சாதாரண நபருக்கு திருமண உதவித்தொகையாக 90 நபர்களுக்கு ரூ.26,75,000 மற்றும் தங்கம் 360 கிராம் வழங்கப்பட்டுள்ளது. 620 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.29,678 லட்சம் செலவில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. 7,121 நபர்களுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டைகளும். 1276 நபர்களுக்கு இலவச பேருந்து பயணச் சலுகை அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் 371 நபர்களுக்கு ரூ.1812300 மதிப்பில் மூன்று சக்கர சைக்கிள்களும், 398 நபர்களுக்கு ரூ.1793800 மதிப்பில் சக்கர நாற்காலிகளும், 40 நபர்களுக்கு ரூ.192000 மதிப்பில் மூளை முடக்கு வாதத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறப்பு மடக்கு சக்கர நாற்காலிகளும், 373 நபர்களுக்கு ரூ.780260 மதிப்பில் காதொலி கருவி மற்றும் சூரிய ஒளியினால் சக்திபெறும் பேட்டரிகளும், 51 நபர்களுக்கு ரூ.227718 மதிப்பில் செயற்கை கால்களும், 125 நபர்களுக்கு ரூ.390390 மதிப்பில் காலிபர் கருவிகளும், 325 நபர்களுக்கு ரூ.108930 மதிப்பில் ஊன்றுகோல்களும், 48 நபர்களுக்கு ரூ.32350 மதிப்பில் ப்ரெய்லி கைக்கடிகாரங்களும், 276 நபர்களுக்கு ரூ.21511 மதிப்பில் கருப்பு கண்ணாடி மற்றும் மடக்கு ஊன்று கோல்களும், 144 நபர்களுக்கு ரூ.5488240 மதிப்பில் மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வாகனங்களும், 72 நபர்களுக்கு ரூ.1170000 மதிப்பில் நவீன செயற்கை கால்களும். 03 நபர்களுக்கு ரூ.30000 மதிப்பில் மேக்னிபயர்களும், 240 பார்வையற்ற நபர்களுக்கு ரூ.38160 மதிப்பில் ஒளிரும் மடக்கு குச்சிகள் என 2466 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1,20,85,659 மதிப்பில் பல வகை உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 6 வயது வரை உள்ள மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள் அனைத்து மாவட்டங்களிலும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த நடமாடும் சிகிச்சைப் பிரவு வாகனம் புதுக்கோட்டை மாவட்டத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழ் நாட்டில் தான் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த சிறப்பு வாகனங்களில், மாற்றுத் திறனாளி குழந்தைகள் பயன்பெறும் வகையில், இயன்முறை சிகிச்சைக் கருவிகளோடு செயல் திறன் பயிற்சி, பேச்சுப் பயிற்சி, பிறந்த குழந்தைகளை பரிசோதனை செய்தல், ஆரம்ப நிலையில் குறைகளைக் கண்டறிதல், உதவி உபகரணங்களுக்கான மதிப்பீடு, பயிற்சி அளித்தல், அனைத்து வகை மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கும் விளையாட்டு முறையில் சிகிச்சை அளித்தல் போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது எனவே இத்தகைய நலத்திட்ட உதவிகளை பெறுவதற்கு மாற்றுத்திறனாளிகள் மாவட்ட ஆட்சியரகத்தில் செயல்பட்டு வரும் மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் விண்ணப்பித்து அதனை உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**